**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**<u>கொழும்பு</u>**

**<u>ஊடக அறிக்கை</u>**

## <u>ஏழாவது சர்வதேச யோகா தினம்</u>

இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் கொழும்பிலுள்ள சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியவை இலங்கை பாதுகாப்பு படையினருடன் இணைந்து ஏழாவது சர்வதேச யோகா தினத்தை கொண்டாடும் முகமாக இன்றைய தினம் (ஜூன் 21) மெய்நிகர் மார்க்கம் ஊடாக விசேட யோகா அமர்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தன. இலங்கை பாதுகாப்புச் செயலர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரட்ன அவர்கள் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்த அதேசமயம் பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அவர்களும், இலங்கையிலுள்ள கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம், பயிற்சி பாடசாலைகள், பாதுகாப்பு அக்கடமிகள் மற்றும் கப்பல்கள் உள்ளிட்ட கிட்டத்தட்ட 150 பாதுகாப்பு ஸ்தாபனங்களைச் சேர்ந்த பாதுகாப்பு துறைசார் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

2. இந்நிகழ்வினை ஆரம்பித்து வைக்கும் முகமாக இரத்மலானை பரம தம்ம சைத்திய பிரிவேனாவின் பிரதம குருவும் பணிப்பாளருமான அதி வணக்கத்துக்குரிய டாக்டர் மைதபே விமலசேர தேரர் அவர்கள் அனைவரினதும் நல்வாழ்வுக்காக புத்த பெருமானின் ஆசிகளை வேண்டி வழிபாடுகளை நடத்தியிருந்தார். இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி அதிமேதகு கோதாபய ராஜபக்ஷ ஆகியோரது செய்திகள் இந்நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு மத்தியில் பகிரப்பட்டிருந்ததுடன் பல்வேறு நன்மைகளுக்காக சகலரும் யோகாவில் ஈடுபடவேண்டுமென்ற ஊக்குவிப்பை அவர்கள் அச்செய்திமூலம் வழங்கியிருந்தனர். இவ்வருட யோகா தினத்துக்கான தொனிப்பொருளான ஆரோக்கியத்துக்காக யோகா என்பது தற்போதைய கொவிட்19 நிலைமைக்கு மத்தியில் எவ்வாறான தொடர்பினைக் கொண்டுள்ளது என்பதனை பிரதமர் நரேந்திர மோடி தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் சமூகம், நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் ஒற்றுமை ஆகியவற்றிற்கு சிறந்ததாக கருதப்படும் யோகா, தொடர்புகளுக்கான உள்ளார்ந்த சக்தியினை கொண்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ தனது செய்தியில், உலகம் முழுவதிலும் இருக்கும் பல்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த மக்களினதும் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திய யோகா, பல்லாயிரம் ஆண்டுகாலமாக இந்திய முனிவர்கள் மேற்கொண்டிருந்த நடைமுறைகள் மற்றும் ஆன்மீக பாரம்பரியங்களின் பொக்கிஷங்களிலிருந்து கிடைக்கப் பெற்றிருக்கும் மிகவும் பெறுமதியானதும் அழகானதுமான பரிசு எனவும் குறிப்பிட்டுள்ளார்.

3. நெகிழ்ச்சித்தன்மை மற்றும் நினைவாற்றலை மேம்படுத்துவதற்கான வாழ்க்கை வழிகாட்டியாக யோகாவை அனைவரும் தளுவிச்செல்ல வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்த உயர் ஸ்தானிகர், இந்நிகழ்வை கொண்டாடுவதற்காக இணைந்து கொண்டிருந்த அனைவருக்கும் தனது நன்றிகளையும் தெரிவித்திருந்தார்.

4. இவ்வருடம் கொவிட்-19 காரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக சர்வதேச யோகா தினத்தை குறிக்கும் சகல நிகழ்வுகளும் மெய்நிகர் மார்க்கங்கள் ஊடாக நடத்தப்பட்டிருந்தன. சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு 2021 மே முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் கொழும்பு, சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தினால் இலவசமாக யோகா அமர்வுகள் நிகழ்நிலையூடு நடத்தப்பட்டிருந்தன. இந் நிகழ்வுகள் அனைத்தும் சர்வதேச யோகா தினத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2021 ஜூன் 20 ஆம் திகதி இரத்மலானை பரம தம்ம சைத்திய பிரிவேனாவில் விசேட யோகா அமர்வு ஒன்று

ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன் இந்த அமர்வில் கலந்து கொண்டிருந்தவர்களுக்கு சிங்கள மொழியில் உயர் ஸ்தானிகரால் வழங்கப்பட்டிருந்த செய்தியும் பகிரப்பட்டது.

5. 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் மிகுந்த உற்சாகத்துடன் இலங்கையில் சர்வதேச யோகா தினத்தை கொண்டாடி வருகின்றது. இந்த நிகழ்வுகளில் இலங்கையின் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். கடந்த காலங்களில் நடைபெற்றிருந்த சர்வதேச யோகா தின நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். பெருநோயினால் மேலெழுந்திருக்கும் சவால்களுக்கு மத்தியில் இவ்வருடம் ஏழாவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்நிலை அமர்வுகள் பலவற்றில் கிட்டத்தட்ட 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்தனர்.

******

கொழும்பு
21 ஜூன் 2021